கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 34/2023**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | இந்திராணி | வயது | 25 |
| கணவர் பெயர் | வெங்கடேஷ் | ஜாதி | |
| தொழில் | கூலி வேலை | மதம் | |
| ஊர் | சென்னை | தாலுக்கா | |

( எதிதி ஆஜரில் உள்ளார். )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது சென்னையில் வசித்து கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் எதிரியின் மனைவியும் எனது கணவரும் பழக்கவழக்கங்களில் உள்ளார்கள். இதனால் ஆஜர் எதிரியின் மனைவி எனது கணவர் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தியிருந்தார். அந்த விசயத்தில் நாங்கள் சமாதானம் செய்து விட்டோம். அதன் பிறகு ஆஜர் எதிரி என்னை தொந்தரவு செய்ய ஆரம்பித்தார். ஆஜர் எதிரி என்னை தகாத வார்தைகளால் திட்டியும், எனது நடத்தை குறித்தும் தவறாக பேசி வந்தார். ஆஜர் எதிரி 23.05.2023 ம் தேதி இரவு 09.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது எனது வீட்டிற்குள் வந்து எனது கையை பிடித்து இழுத்து கட்டிப்பிடித்தார். நான் உடனே திருவாரூர் அனைத்த மகளிர் காவல் நிலையத்திற்கு போன்செய்து தகவல் கொடுத்தேன். இரவு நேரம் ஆனதால் மறுநாள் காலை சென்று அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரி மீது புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். வாக்குமூல சங்கதிகளை நான் தான் போலீசாரிடம் சொன்னேன். **புகார் வாக்குமூலம் அசா.ஆ-1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில்லாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 34/2023**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சரண்யா | வயது | 28 |
| கணவர் பெயர் | கணபதி | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | கருப்பூர் | தாலுக்கா | |

( எதிதி ஆஜரில் உள்ளார். )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது கருப்பூரில் வசித்து வந்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரி எனது கணவர் ஆவார். அசா.1 ன் கணவர் நான் குளிக்கும் போது விடியோ எடுத்து அதை வைத்து மிரட்டினார். அதனால் நான் அசா.1 ன் கணவர் மீது புகார் கொடுத்தேன். அதில் சமாதானம் ஆகிவிட்டோம். ஆஜர் எதிரி அசா.1 டம் எந்த பிரச்சனையும் செய்யவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

**போலீசார் விசாரணையில் எங்களுக்கும்,** அசா.1 ன் குடும்பத்திற்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றும், இந்நிலையில் கடந்த 25.05.2023 ந் தேதி 09.00 மணியளவில் ஆஜர் எதிரி என்னை அடித்து , துரத்தினார் என்றும், ஆஜர் எதிரிக்கும், எனக்கும் அசா.1 ன் வீட்டின் முன்பு தகராறு ஏற்பட்டது என்றும், அசா.1 வீட்டிற்குள் இருந்தார் என்றும், ஆஜர் எதிரி அசா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி எனது கணவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில்லாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 34/2023**

2024-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 3 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பானு | வயது | 50 |
| கணவர் பெயர் | இரங்கசாமி | ஜாதி | |
| தொழில் | வீட்டுக்குடுத்தனம் | மதம் | |
| ஊர் | கருக்கங்குடி | தாலுக்கா | |

( எதிதி ஆஜரில் உள்ளார். )

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது கருக்கங்குடியில் வசித்து வந்து வீட்டுக்குடுத்தனம் செய்து வருகிறேன். அசா.1 ஐ தெரியும். ஆஜர் எதிரி எனக்கு தெரியும். அசா.1 க்கும் ஆஜர் எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தனர்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரிக்கவில்லை என்பதால் அரசு தரப்பு வேண்டுகோளிற்கிணங்க குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளித்து அ.த.கு.வி.**

**போலீசார் விசாரணையில்,** அசா.1ன் குடும்பத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் பிரச்சனை இருந்து வந்தது என்றும், இந்நிலையில் கடந்த 25.05.2023 ந் தேதி 09.00 மணியளவில் ஆஜர் எதிரி அவரது மனைவியை அடித்து , துரத்தினார் என்றும், ஆஜர் எதிரிக்கும், அவரது மனைவிக்கும் அசா.1 ன் வீட்டின் முன்பு தகராறு ஏற்பட்டது என்றும், அசா.1 வீட்டிற்குள் இருந்தார் என்றும், ஆஜர் எதிரி அசா.1 ஐ தகாத வார்த்தைகளால் திட்டினார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில்லாததால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**

Typed under My dictation in Open Court read over to Witness and admitted by the witness to be correct.

Sd/-
S. Cintha, B.A.,B.L(Hons).,
Judicial Magistrate,
Additional Mahila Court,
Tiruvarur